## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE NO.I,MANNARGUDI**

**C.C.No. 360/2019 P.W. 11 / LW 14**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு.N. ராஜேந்திரன் - காவல் துணைக்கண்காணிபாளர்** | **Caste** | : | |
| **Father's Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.10.2022.**

**முதல் விசாரணை** :

1) நான் தற்பொழுது திருவாரூர் மாவட்டம், மாவட்ட குற்றப்பதிவேடு கூடத்தில் காவல்துணைக்கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் மன்னார்குடி நகர காவல் ஆய்வாளராக நான் பணிபுரிந்தபோது நிலையக்குற்ற எண். 543/2019 சிறப்பு உதவி ஆய்வாளர் **திரு. ராஜ்மோகன்** அவர்கள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து புலன் விசாரணைக்காக வழக்கு கோப்புகளை என்னிடம் ஒப்படைத்தார்.

2) புலன் விசாரணைக்காக எடுத்துக்கொண்ட நான் சம்பவ இடத்திற்கு 10.09.2019 அன்று சுமார் 11.30 மணிக்கு சென்றேன். சம்பவ இடத்தை சாட்சிகள் ராஜகோபால் மற்றும் கண்ணன் முன்னிலையில் பார்வையிட்டேன். மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **வரைபடம் அசாஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகசர் அசாஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** முதல் கட்ட புலன் விசாரணையில் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்டு இறந்து போன **சவுரிராஜன்** என்பவரது பிரேதத்தை 10.09.2019 ஆம் தேதி மன்னார்குடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கு முன்பாக 13 மணியிலிருந்து 14.30 வரை பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். பிரேத விசாரணை அறிக்கையும் தயார் செய்தேன். **மேற்படி**

**பிரேத விசாரணை அறிக்கை அசாஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**இந்த பட்டியல் சாட்சிகள் 7 லிருந்து 9 வரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்னே். பிரேதத்தை சடலக்கூராய்வுக்காக உரிய நடைமுறையுடன் மருத்துவர் வசம் ஒப்படைத்தேன்.

4) பின்னர் பிரேத விசாரணைக்கு பின்னிட்டு சடலத்தை உறவினர் வசம் ஒப்படைத்தேன். சம்பவம் உண்மை என தெரியவந்ததால் குற்றம் சுமத்தப்பட்ட நபரை தேடியபோது அவர் தானாக 12.01.2019 அன்று நிலையம் ஆஜரானவரை குற்றக்காரணம் கூறி கைது செய்து நிலையப்பிணையில் விடுவித்தேன்.

5) புலன் விசாரணையில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வாகனமான TN 50 AS 2812 மஞ்சள் கலர் இயங்கும் கிரேனை கைப்பற்றி மோட்டார் வாகன ஆய்வாளர் வசம் ஆய்வுக்காக உட்படுத்தினேன். ஆய்வுக்கு பின்னிட்டு மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து ஆய்வறிக்கையும் பெற்று தாக்கல் செய்தேன்.

6) சடலக்கூராய்வு மேற்கொண்ட மருத்துவரை நான் விசாரித்து தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். சடலக்கூராய்வு அறிக்கை பெற்று தாக்கல் செய்தேன். *( அரசுத்தரப்பில் கு.வி.மு.ச 1973 பிரிவு 294(3) ன் கீழ் சடலக்கூராய்வு அறிக்கையையும், மோட்டார் வாகன ஆய்வறிக்கையையும் புலன் விசாரணை அதிகாரி மூலம் குறியீடு செய்ய அனுமதிக்கப்பட்டது. படிவம் தாக்கல் செய்யப்பட்டது. அதில் எதிரி தரப்பு ஆட்பேசனை தெரிவிக்கப்பட்டது.)*

7) எனது புலன் விசாரணையில் மேற்கூறிய **சவுரிராஜனுக்கு** ஏற்பட்ட மரணமானது குற்றம் சுமத்தப்பட்ட நபரின் அஜாக்கிரதையும், கவனக்குறைவும், வாகன இயக்கத்தால் ஏற்பட்டது என்று தெரியவந்ததும் எனது விசாரணையை இத்துடன் முடித்து எதிரியின் செய்கையானது **இதச 1860 பிரிவு 304-A**- ஈர்க்கக்கூடியது என்று குற்ற இறுதி அ றிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை :_ குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் _:**

1) காவல்நிலையத்தில் இருந்து சம்பவ இடம் மிகவும் அருகில்தான் என்று சொன்னால் சரிதான். நான்சென்றுதான் சம்பவ இடத்தில்இருந்த பிரேதம் மற்றும் வாகனங்களை அப்புறப்படுத்தினேன் என்றால் இல்லை. அசாஆ. 4 ஆன மாதிரிவரைபடம்மற்றும் அசாஆ. 5 ஆன மகசரில் விபத்து நடந்ததற்கான

சமிக்கைகளை குறிப்பிடுவதற்கு எதுவும் குறிப்பிடப்படவில்லைஎன்று சொன்னால் சரிதான். மேற்படி கிரேனை சம்பவ இடத்தில் வைத்து ஆய்வு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். இரண்டு நாட்கள் தாமதமாகதான் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது என்று சொன்னால் சரிதான். அசா 4 கிருஷ்ணன் சம்பவ இடமானது மன்னார்குடி - கும்பகோணம் சாலை இல்லை என்று சாட்சியமளித்திருந்தார் அது தவறு.

2) சம்பவ இடத்தில் ரத்தம் தோய்ந்த சங்கதி தொடர்பாக ஏதேனும் விசாரணை செய்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்தின் அருகில் மறைந்த முன்னால் முதல் அமைச்சர்களின் திருவுருவச்சிலை இருந்ததாக குறிப்பிட்டுள்ளதை பொருத்து அதனையும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. இறந்து போன நபர் வீரா டீக்கடைக்கு செல்வதற்கு சாலையை குறுக்கே கடக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான்.

3) வழக்கமாக இறந்து போன நபர் பணிக்கு ச்செல்லும் நேரம் குறித்தோ , அவர் எப்போது செல்வார் என்பது குறித்து நான் எதுவும் விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி பாராங்குசம்தெருவிற்கு கிழக்கு பக்கமாக செல்லக்கூடிய சாலையை வரைபடத்தில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை. பஸ்ஸ்டாண்டில் உள்ள வீரா டீக்கடைக்கு மேற்படி வீதி வழியாகதான் செல்லமுடியும் என்று சொன்னால் சரிதான். அது தொடர்பாக மேற்படி பாதையை வரைபடத்தில் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான்.

4) சம்பவ இடத்திற்கு அருகில் நிறைய கடைகள்இருப்பதாக வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை பொருத்து மேற்படி நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி வரைபடத்தில் தள்ளுவண்டி டீக் கடையை பொருத்து மேற்படி வீதி தெற்கு வீதி என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில்தான் துரை என்பவர் டீக்கடையில் வேலை செய்கிறார் என்று சொன்னால் சரிதான்.

5) பணிக்கு செல்லும் அவசர கதியில் இறந்து போன நபர் சாலை விதிகளை கடைபிடிக்காமல் அஜாக்கிரதையாக சென்று தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றும் அந்த கவனமின்மை மறைக்கப்பட்டு வாகன விபத்து இழப்பீடு பெறுவதற்காக ஆவணங்கள் அனைத்தும் தயார் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சரிவர விசாணை செய்யாமல் ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது

என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழகிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்தவழக்கிற்கு உகந்ததுபோல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன் தகவல் காவல்நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டது என்றாலும், அதனை மறைத்து காலதாமதமாக ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

**Sd/-A.S.Ameerdheen,**

நீதித்துறை நடுவர் எண்.1,

மன்னார்குடி.